**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 225/2018**

PW1 – ஜெயபாலன் த/பெ கோவிந்தசாமி
நாள்–09.01.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தாவா சொத்து வாய்க்காங்கரை பிரதான தெருவில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் சந்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த சந்து பகுதி சதாசிவம் முதலியார் காலனி என்று அழைப்பார்கள். எனது வீடும் 1,2 பிரதிவாதிகளின் வீடும் தெற்கு பார்த்தாவாறு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்குபுறம் 1,2 பிரதிவாதிகள் வீடு உள்ளது என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சுவற்றை ஒட்டி 1,2 பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியதால் அவ்வாறு கட்டக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1,2 பிரதிவாதிகளின் வீட்டிற்கு பின்புறம் உள்ள இடமும் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

வாய்க்காங்கரை வீதியிலிருந்து மேற்கு நோக்கி பிரதிவாதிகளின் வீடு வரை எனக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்தும் வாய்க்காங்கரை தெருவில் இருந்து மேற்கு நோக்கி பிரதிவாதிகளின் வீட்டு கொல்லை வரை உள்ள இடத்திற்கான பட்டா தான் வா.சா.ஆ.9 என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 ஆனது 995 சதுர மீட்டருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆனது நகர அளவை எண் 28 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கில் உள்ள நகர நில அளவை எண் 29 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

எனது வீட்டிற்கு கிழக்கு புறம் சேகர் என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். சேகர் என்பவரின் வீட்டின் புல எண் 30 என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழபுறம் உள்ள சேகர் என்பவரது வீடு தரைதளம் மற்றும் முதல் தளம் கொண்டது என்றால் சரிதான். எனது வீட்டின் மேற்குபுற தாய் சுவற்றிற்கும் என்னுடைய வீட்டின் மதில் சுவருக்கும் சுமார் 2 ¼ அடி இருக்கும் என்றால் சரியல்ல. 1 ¾ அடி தான் இருக்கும். நான் சொல்வது பொய் என்றும் 2 ¼ அடிக்கு குறையாமல் சந்து உள்ளது என்றால் சரியல்ல.

எனது வீட்டின் மேற்குபுறம் உள்ள மதில் சுவர் சுமார் 6 அடி உயரம் இருக்கும் என்றால் சரியல்ல. 4 ½ அடி உயரம் தான் இருக்கும்.

தாவா சொத்திலுள்ள வீட்டின் முதல் தளத்தில் மேற்குபுறம் தென்வடலாக பால்கனி அமைத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வீட்டின் மேற்குபுற தாய் சுவற்றில் 2 பிரதான வாயிற்கதவும், 3 ஜன்னல்களும் உள்ளது. எனது வீட்டின் தரை தளத்தில் வடபுறம் கடைசியில் ஒரேயொரு ஜன்னலும், 2 வெட்டிலேட்டரும் வைத்துள்ளேன் என்றால் ஜன்னல் மட்டும் தான் கடைசியில் உள்ளது. வெட்டிலேட்டர் இடைஇடையே உள்ளது. எனது வீட்டின் கிழக்குபுற தாய் சுவற்றில் 2 தளத்திலும் ஜன்னலும், வெட்டிலேட்டரும் கிடையாது என்றால், ஜன்னல்கள் இல்லை, கீழ் தளத்தில் 4 வெட்டிலேட்டரும் முதல் தளத்தில் 4 வெட்டிலேட்டரும் உள்ளது.

முதல் தளத்தில் உள்ள பால்கனி சுமார் 3 அடி அகலம் இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் 1 ¾ தான் இருக்கும். 1 ¾ அடியில் பயன்படுத்தவே முடியாது என்றும், வழக்கிற்காக 1 ¾ அடி இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டின் கிழபுற தாய் சுவறை ஒட்டி சேகர் வீட்டின் சன்சைடு இருக்கிறது என்றால் சரியல்ல. ½ அடி இடைவெளி உள்ளது. எனது வீட்டின் கிழக்கு புற தாய் சுவரை ஒட்டி சேகர் வீட்டின் மதில் சுவர் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. நான் சட்டவிதிகளை பின்பற்றி தரைதளமும், முதல் தளமும் கட்டவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் கிழக்குபுறமும், மேற்குபுறமும் ஜன்னல்கள் வைத்து கட்டவில்லை என்றால் சரியல்ல.

சேகர் வீட்டின் கிழக்கு புறமும், மேற்கு புறமும் 2 தளங்களிலும் ஜன்னல் வைத்து கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. எனது முதல் தளத்திற்கும், பிரதிவாதிகளின் வீட்டின் சுவற்றிற்கும் சுமார் 4 அடி இடைவெளி உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக 4 அடி இடைவெளி இல்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது வீட்டின் தரை தளம் மற்றும் முதல் தளத்தை எனது சொந்த உபயோகத்தில் தான் வைத்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வீடு தெற்கு வடக்கில் 32 அடியும், கிழக்கு மேற்கில் 20 அடி அளவிலும் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியாக சொல்லமுடியவில்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு எனது தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தரைதளத்திற்கான கட்டுமான அனுமதி, வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனது தரப்பை மெய்ப்பிக்ககூடியதாக இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10-ன் அடிப்படையில் உண்மையான அளவுகளை பிரதிபலிப்பதாக இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ல் கண்ட புகைப்படங்கள் எப்போது எடுக்கப்பட்டது என்பதற்கான விவரம் இந்திய சாட்சிய சட்டப்பிரவு 65-B சான்றில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ற்கான புகைப்படங்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 6 மாதங்களுக்கு முன்பு எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதற்கான சான்று 2023 -ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வாய்க்காங்கரை தெருவிலுள்ள எனக்கு பாத்தியப்பட்ட ஓட்டு வீடுகளை 4 நபர்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி சீர்காழி மணிகூண்டு அருகில் சாலையோரமாக பூ விற்பனை செய்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி மாடிவீடு கட்டியதால் காழ்புணர்ச்சியின் காரணமாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள எவ்வித பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மாடிவீடு கட்டி குடிபுகுந்து இன்றையிலிருந்து சுமார் 3 வருடம் இருக்கும் என்றால் சரிதான். தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.